**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**
**போச்சம்பள்ளி , கிருஷ்ணகிரி மாவட்டம்**
**முன்னிலை – திரு. S.V. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர், போச்சம்பள்ளி.**

2024 – ஆம் ஆண்டு ஜீலை மாதம் 15 ஆம் நாள் திங்கள்கிழமை

இ.ம.எண். 05 /2023
in
அ.வ. எண் 27/2013

**சகுந்தலா மற்றும் சிலர் ...மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

**/எதிராக /**

**தண்டபாணி ... எதிர்மனுதாரர்/வாதி**

**இம்மனுவானது 17.03.2023 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. A.பீமராஜ் அவர்களும்,எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. M.ஜெயபாலன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு, மனு, எதிருரை பரிசீலனை செய்யப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்**

**<u>உத்தரவு</u>**

**மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் ஆணை 18 விதி 17 மற்றும் சட்டப்பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் மேற்படி வழக்கில் வாதி தரப்பு 2ம் சாட்சியை மீண்டும் அழைத்து (Recall) விசாரணை செய்ய கேட்டு மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

**<u>1. மனுவின் சுருக்கம்</u>**

**1. இந்த மனுவில் 1ம் மனுதாரர். மேற்படி வழக்கில் 1 ஆம் பிரதிவாதியாவேன். மற்ற மனுதாரர்களுக்காக இந்த அபிடவிட்டை தாக்கல் செய்கிறோன். நான் போதிய படிப்பறிவில்லாதவன் ஆவேன்.**

2. வாதி மேற்படி பொய் வழக்கினை எங்களுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ளார். நான் எங்கள் தரப்பில் விரிவான எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேன்.

3. மேற்படி வழக்கில் 29.01.2020 ஆம் தேதி வாதி தரப்பு 2–ம் சாட்சியின் (P.W.2 – சின்னசாமி த.பெ. வெங்கட்டப்ப நாயுடு) விசாரணை முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் P.W.2 வாதி பெயரில் ஏற்படுத்தியுள்ள கிரய ஆவணம் மற்றும் சில ஆவணங்களின் அடிப்படையில் P.W.2 மீண்டும் அழைத்து விசாரிக்க வேண்டியது அவசியமும் நியாயமும் ஆகிறது. மேலும் கொரொனா காரணமாக நீதிமன்றம் இயங்காத நிலையில் உடனே விசாரிக்க இயலவில்லை.

4. எனவே வாதி தரப்பு 2 ஆம் சாட்சியை (P.W.2) மீண்டும் அழைத்து (Recall) விசாரணை செய்ய எங்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டியது மிகவும் நியாயமும் அவசியமும் ஆகிறது. இல்லையேல் எங்களுக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் நேரிடும். எனவே கனம் கோட்டார் அவர்கள் தயவு செய்து மேற்படி வழக்கில் வாதி தரப்பு 2 ஆம் சாட்சியை (P.W.2) மீண்டும் அழைத்து (Recall) விசாரணை செய்ய எங்களுக்கு வாய்ப்பளித்து நீதி செய்ய வேண்டுமாய் வணக்கமுடன் பிரார்த்திக்கிறேன் என மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்.</u>

1. மனுதாரர்களின் மனு வீணானது, சட்டப்படியும் நீதிப்படியும் நிலைக்கத்தக்கதல்ல, மாறாக தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

2. இந்த எதிர் உரையில் குறிப்பாக ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை

தவிர ஏனையவற்றை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

3. மேற்படி வழக்கில் கடந்த 22.01.2021ம் தேதியில் வாதி தரப்பு சாட்சி 2 ன் விசாரணை முடிக்கப்பட்டது என்பது உண்மை. மேற்படி வழக்கில் PW.2 வாதி பெயரில் ஏற்படுத்தியுள்ள கிரய ஆவணம் மற்றும் சில ஆவணங்களின் அடிப்படையில் PW.2ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்யவேண்டியுள்ளது என்பது பொய் சங்கதியாகும். மேலும் கொரோனா நோய் தொற்று காரணத்தினால் கிரய ஆவணம் மற்றும சில ஆவணங்களின் பேரில் குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை என்பது சட்டப்படியும் நீதிப்படியும் ஏற்கக்கூடியதல்ல

4. மேற்படி வா.சா.2 சாட்சியிடம் பிரதிவாதிகள் தரப்பில் முழுமையான வகையில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுவிட்டது. மேற்படி வாசா.2 குறுக்கு விசாரணை செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்து இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பிலான பி.சா.1 ஐ வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்த பிறகு அதற்கேற்றவாறு வாதி தரப்பு சாட்சிகளிடம் மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய பிரதிவாதிகள் கோருவது சாட்சிய சட்டத்திற்கு எதிரானது ஆகும். மேற்படி மனுதாரர்கள் காலம் தாழ்த்தி இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். மேற்படி வழக்கில் கடந்த 22.01.2021 ம் தேதியில் முடிக்கப்பட்ட வா.சா.2ஐ குறுக்கு விசாரணையை தொடர வாதி தரப்பு சாட்சியத்தை மீண்டும் அழைத்து விசாரணை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. மேற்படி மனுதாரர்களின் மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. எனவே மனுதாரர்களின் மனுவை தள்ளுபடி செய்து நீதி வழங்குமாறு கனம் நீதிமன்றத்தை எதிர்மனுதாரர் வணக்கமுடன் பிரார்த்திகிறார் என எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. தீர்வு**

இம்மனுவில் தீர்மாணிக்க வேண்டிய அம்சம் என்னவென்றால் மேற்படி மனுவானது அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்.

4. மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது இவ்வழக்கில் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள சாட்சியை வா.சா.2 வாதி பெயரில் ஏற்படுத்தியுள்ள கிரய ஆவணம் மற்றும் சில ஆவணங்களின் அடிப்படையில் வா.சா.2 ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்ய வேண்டி உள்ளது என்றும், இவ்வழக்கில் 28.01.2020ம் தேதி வாதி தரப்பு சாட்சி 2ன் விசாரணை முடிக்கப்பட்டுள்ளது என்றும், கொரோனா காரணமாக நீதிமன்றம் இயங்கா நிலை ஏற்பட்டதால் உடனடியாக விசாரிக்கவில்லை என்றும் எனவே வாசா.2ஐ திரும்ப அழைத்து விசாரணை செய்ய தங்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டியது நீதியின் பொருட்டும் நியாயத்தின் பொருட்டும் அவசியமாக உள்ளது என்று வாதிட்டார். மேலும் தனது தரப்பில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் K.K. Velusamy Vs Palanisamy என்ற வழக்கில் 30.03.2011ம் தேதி பிறப்பித்த தீர்ப்புரையை தங்களது வழக்கிற்கு ஆதரவாக சமர்பித்தார்.

5. எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது, இவ்வழக்கில் வாதி தரப்பு சாட்சியமானது முடிக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.1ஐ வாதி குறுக்கு விசாரணை செய்த பிறகு அதற்கேற்றவாறு வாதி தரப்பு சாட்சிகளிடம் மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய பிரதிவாதிகள் கோருவது சாட்சிய சட்டத்திற்கு எதிரானது ஆகும் என்றும் இம்மனுவை காலம் தாழ்த்தி தாக்கல் செய்துள்ளதாகவும், வா.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்ய வாதி தரப்பு சாட்சயத்தை PW.2 ஐ Recall செய்ய வேண்டிய அவசியம் இல்லை எனவும், வா.சா.2ஐ

பிரதிவாதிகள் தரப்பில் முழுமையான முறையில் ஏற்கனவே குறுக்கு விசாரணை செய்யப்பட்டுவிட்டதாகவும் தற்போது வா.சா.2 ஐ வாதி பெயரில் ஏற்படுத்தியுள்ள கிரய ஆவணம் மற்றும்சில ஆவணங்கள் அடிப்படையில் விசாரணை செய்ய வேண்டியுள்ளதாக கூறியுள்ளது பொய்யானது ஆகும் என்றும் எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

6. மனுதாரர்கள் தரப்பில் வா.சா.2 ஐ கிரய ஆவணம் மற்றும் சில ஆவணங்கள் அடிப்படையில் குறுக்கு விசாரணை செய்ய வழக்கில் வா.சா.2ஐ Recallசெய்ய கேட்கப்பட்டுள்ளது.

7. எதிர்மனுதாரர் தரப்பில் வா.சா.2 ஐ எற்கனவே முழுமையாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டு விட்டதாகவும் பி.சா.1 சாட்சியம் விசாரிக்கப்பட்ட பிறகு வாதி தரப்பு சாட்சியத்திற்கேற்றவாறு குறுக்கு விசாரணை செய்வதற்காக இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

8. இவ்வழக்கில் வா.சா.2 ஏற்கனவே மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். பின்னர் வாதிகள் தரப்பில் வா.சா.3 விசாரிக்கப்பட்டு பின்னர், வாதி தரப்பு சாட்சியமானது 22.01.2021ம் தேதி முடிக்கப்பட்டுள்ளது. பின்னர் பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி 07.12.2022ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு, 11.01.2023ம் தேதி பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. பின்னர் பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியத்திற்காக வழக்கு இருந்தபோது மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் வா.சா.2 ஐ வாதி பெயரில் வா.சா.2 ஏற்படுத்தியுள்ள கிரய ஆவணம் மற்றும் சில ஆவணங்களின் அடிப்படையில் மீண்டும்

அழைத்து விசாரணை செய்ய வேண்டி உள்ளது எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் எதிர்மனுதாரர் தரப்பில் வா.சா.2 ஐ ஏற்கனவே பிரதிவாதிகள் சார்பில் முழுமையான வகையில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுவிட்டது என்றும 2 வருடங்கள் கழித்து இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும் பி.சா.1ஐ வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்த பிறகு அதற்கேற்றவாறு வாதி தரப்பு சாட்சிகளிடம் மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய பிரதிவாதிகள் கோருவது சாட்சிய சட்டத்திற்கு எதிரானது ஆகும் என்று கூறப்பட்டுள்ளது.

**கட்டளை 18 விதி 17 Court may recall and ezamin witness.**

"The court, may at any stage of a suit, recall any witness who has been examined and may (subject to the law of evidence for the time being in force) put such questions to him as it thinks fit." என்று கூறப்பட்டுள்ளது.

9. மேற்படி பிரிவின் படி வழக்கிற்கு தேவைப்பட்டால் வழக்கின் எந்த நிலையிலும் சாட்சியை திரும்ப அழைத்து விசாரிக்க நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது. இவ்வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் வா.சா.2 ஐ விசாரணை (Recall) செய்ய மனுத்தாக்கல் செய்துள்ளார்கள். எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபனையாக ஏற்கனவே வா.சா.2ஐ மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டு உள்ளது., வா.சா.2ஐ மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கும்போது வழக்கை பொறுத்து என்ன நடந்ததோ மற்றும் ஆவணத்தில் உள்ள சங்கதிகள் ஆகியவற்றை தான் கூறப்போகிறார் எனவே அதனால் வாதிக்கு பாதிப்பு ஏற்படும் என்று எடுத்துக்கொள்ள இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி விசாரணையால் வழக்கிலும் தகுந்த முடிவு எடுக்க உதவிகரமாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும்

**இம்மனுவானது காலதாமதாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தரப்பில் கூறப்பட்டிருந்தாலும் மேற்படி காலதாமதத்திற்கு மனுதாரர் கொரோன காலகட்டம் என்பதால் உடனடியாக மனுத்தாக்கல் செய்ய இயலவில்லை என்று கூறியிருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மாண்புமிகு உச்சநீதிமன்றம் K.K. Velusamy Vs Palanisamy என்ற வழக்கில் பாரா 8ல் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.**

"Order 18 Rule 17 of the Code enables the court, at any stage of a suit, to recall any witness who has been examined (subject to the law of evidence for the time being in force) and put such questions to him as it thinks fit. The power to recall any witness under Order 18 Rule 17 can be exercised by the court either on its own motion or on an application filed by any of the parties to the suit requesting the court to exercise the said power. The power is discretionary and should be used sparingly in appropriate cases to enable the court to clarify any doubts it may have in regard to the evidence led by the parties. The said power is not intended to be used to fill up omissions in the evidence of a witness who has already been examined. [Vide Vadiraj Naggappa Vernekar v. Sharadchandra Prabhakar Gogate - 2009 (4) SCC 410]. Order 18 Rule 17 of the Code is not a provision intended to enable the parties to recall any witnesses for their further examination-in- chief or cross-examination or to place additional material or evidence which could not be produced when the evidence was being recorded. Order 18 Rule 17 is primarily a provision enabling the court to clarify any issue or doubt, by recalling any witness either suo moto, or at the request of any party, so that the court itself can put questions and elicit answers. Once a witness is recalled for purposes of such clarification, it may, of course, permit the parties to assist it by putting some questions." **அதன்படி முதல்**

**விசாரணையின் தொடர்ச்சியாகவோ அல்லது மீண்டும் குறுக்கு விசாரணை செய்வதற்காகவோ கூடுதல் சாட்சியத்தை ஆஜர்படுத்துவதற்காகவோ மேற்படி பிரிவின் படி சாட்சியை திரும்ப அழைத்து விளக்கம் பெற முடியும்**. **மேலும் அதே வழக்கில் பாரா** 14**ல்** "Neither the trial court nor the High court considered the question whether it was a fit case for exercise of discretion under section 151 or Order 18 Rule 17 of the Code. They have not considered whether the evidence sought to be produced would either assist in clarifying the evidence led on the issues or lead to a just and effective adjudication. Both the courts have mechanically dismissed the application only on the ground that the matter was already at the stage of final arguments and the application would have the effect of delaying the proceedings." **என்று கூறப்பட்டுள்ளது. வழக்கானது வாதுரைக்காக போடப்பட்டிருந்தாலும் மேற்படி சாட்சியமானது வழக்கின் சரியான முடிவு எட்டுவதற்கு உதவியாக இருக்குமேயானால் காலதாமதத்தை கணக்கில் கொள்ளாமல் செயல்படலாம் என்று கூறப்பட்டுள்ளது**. எனவே **மேற்படி தீர்ப்புரையானது இம்மனுவின் சங்கதிகளுக்கு ஏற்றவாறு உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது**.

10. **மனுதாரர்கள் தரப்பில் கிரய ஆவணம் மற்றும் சில ஆவணங்களின் அடிப்படையில் வா.சா.**2**ஐ விசாரணை** (Recall) **செய்ய வேண்டியுள்ளதாக கூறியுள்ளது திருப்திகரமாக உள்ளதால் நீதியின் நலன் கருதி மனுதாரர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது**. **இருப்பினும் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட சிரமத்தைக் கருத்தில் கொண்டு மனுதாரர்கள் மனுவை எதிர்மனுதாரர் செலவுடன் அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.**

11. இறுதியாக, மனுதாரரர்கள் எதிர்மனுதாரருக்கு செலவுத் தொகையாக ரூ.2000/-ஐ 24.07.2024 தேதிக்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும் தவறும் பட்சத்தில் இம்மனு மறு உத்தரவின்றி தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க: 24.07.2024

என்னால் சொல்லப்பட்டதை, சுருக்கெழுத்து தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2024 -ம் ஆண்டு ஜீலை மாதம் 15-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.